UNITED NATIONS
SRI LANKA


# தீங்கு விளைவிக்கும் பேச்சு

## இலங்கையில்


2024 செப்டம்பர்


> தகவல்களின் நேர்மைத்தன்மை குறித்து கேள்வி எழுப்புவது ஜனநாயகம் ஆகும்.அது யதார்த்தம் குறித்து பகிர்ந்துகொள்ளும்இ உண்மை விடயங்களைக் அடிப்படையாகக்கொண்ட மனப்பதிவாகும். பொய்யான கதையாடல்கள்இ திரிபுபடுத்தல்கள் மற்றும் பொய்கள் என்பனஇ எல்லாவற்றிலும் குறைகாணும் பண்புஇ அவநம்பிக்கைஇ மற்றும் விலகி நிற்கும் நிலை என்பவற்றை போஷித்து வளர்கின்றன. அவை சமூக நல்லிணக்கத்தைச் சீர்குலைத்துஇ நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அணுகமுடியாத தூரத்திற்குத் தள்ளிவிடுகின்றன.
>
> அந்தோனியோ குடேரஸ்
> ஐ.நா.செயலாளர் நாயகம்

## போக்குகள் தீங்கு விளைவிக்கும் பேச்சு[1]




தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் (வெறுப்புப் பேச்சு, தவறான/பொய்யான தகவல்கள், துன்புறுத்தல் மற்றும் தூண்டிவிடுதல்) 2024இல் முன்னைய வருடத்தைவிட 32% வீழ்ச்சியடைந்துள்ளது. இது பிரதானமாக[2] இன மற்றும் மத சிறுபான்மையினரை குறிவைக்கும் உள்ளடக்கத்தில் 52% சரிவின் பின்னணியில் இடம்பெற்றது.




ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்தும் இன-மத வெறுப்பு பேச்சு குறைவாகவே உள்ளது, நெருங்கிய போட்டியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் இத் தேர்தலில் வேட்பாளர்கள் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த வாக்காளர்களையும் கவர்ந்து வருவதால் இது சாத்தியமாக இருக்கலாம்.

ஒட்டுமொத்தமாக, தீங்கிழைக்கும் உள்ளடக்கத்தில் நேர்மறையான போக்குகள் இருந்தபோதிலும், பெண்கள் மற்றும் சிறுமிகளை குறிவைக்கும் உள்ளடக்கம் தொடர்ச்சியான கவலையாக உள்ளது, 2024இல் அறிவிக்கப்பட்ட அனைத்து தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களிலும் கிட்டத்தட்ட 45% இத்தகைய உள்ளடக்கங்களாக இருக்கின்றன.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பெண் வேட்பாளர்கள் இல்லையென்றாலும் 2024 ஓகஸ்டில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களில் 53 சதவீதமானவை பெண்களைக் குறிவைத்தவையாக இருந்தன. இதில் பெரும்பாலானவை பெண் அரசியல்வாதிகள் மற்றும் பிரபல நபர்களையும் துன்புறுத்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தன.

1. பேஸ்புக், யூடியூப் மற்றும் டிக்டோக் ஆகியவற்றின் கண்காணிப்பின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் சமூகப் பங்காளியால் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி
2. இலங்கையில் உள்ள ஐ.நா., தவறான தகவல் மற்றும் பொய்யான தகவல் விவரிப்புகளை சுயாதீனமாக கண்காணிக்க நம்பகமான வெளிப்புற உண்மைச் சரிபார்ப்பாளர்களை நம்பியுள்ளது. கண்காணிப்பு திறன் கட்டுப்பாடுகள் காரணமாக ஆன்லைனில் உள்ள உண்மையான தவறான தகவல் உள்ளடக்கம் அதிகமாக இருக்கலாம்.

## அறிவிக்கப்பட்ட தீங்கு விளைவிக்கும் பேச்சு தொடர்பாக தீங்கு விளைவிக்கும் பேச்சு

| | பதில் வீதம் | நீக்கப்பட்டவற்றின் வீதம் |
|---|---|---|
| | 83.6% | 79.6% |
| | 79.6% | 48.4% |
| | 36.8% | 19.7% |

# தீங்கு விளைவிக்கும் பேச்சு க்களின் உதாரணங்கள்

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் (UNHCR) மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பொய்யாகப் புனையப்பட்ட அறிக்கை ஒன்று கடந்த மே மாதம் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டது.




Fact check

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் (EU) மதிப்பீடு ஒன்றை நடத்தியதாகக் கூறும் தவறான தகவல் கடந்த ஜூலை மாதம் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டது. எனினும், பின்னர் இது ஐரோப்பிய ஒன்றியத்தால் நிராகரிக்கப்பட்டது.



Fact check

இலங்கையின் 2024 ஜனாதிபதித் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளரின் வெற்றிக்கான சாத்தியக்கூறுகளை இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் ஒன்று கூறியதாக ஓகஸ்ட் மாதத்தில் ஒரு பதிவு பகிரப்பட்டது. மேற்படி வட்டாரத் தகவல் ஒரு மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்தது என்று அந்தப் பதிவு தெரிவித்தது. எனினும். இது பின்னர் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் நிராகரிக்கப்பட்டது.



Fact check

செப்டம்பர் 5 ஆம் திகதி, தபால் மூல வாக்குப்பதிவு தொடங்கிய சிறிது நேரத்திலேயே, பல்வேறு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை ஏற்கனவே எண்ணப்பட்டு பகிரப்பட்டுவிட்டதாகக் கூறி, சமூக ஊடகங்களில் உத்தேச முடிவுகளுடனான பதிவுகள் நிரம்பி வழியத் தொடங்கின. தபால் மூல வாக்குகளை எண்ணும் செயற்பாடானது செப்டெம்பர் 21 ஆம் தேதி மாலை, ஜனாதிபதி தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைந்த பின்னரே ஆரம்பிக்கப்படும்.



Fact check

# தீங்கு விளைவிக்கும் பேச்சு க்குப் பதில் நடவடிக்கை எடுப்பது எப்படி?

**விலகவும் - அது பொய்யெனத் தெரிந்ததும், மற்றும்/அல்லது யாரோ ஒருவருக்குத் தீங்கானது என்று அறிந்ததும்**

**உண்மையை உறுதிசெய்யவும் – அதனைப் பகிர்வதற்கு முன்**

**உண்மையை உரத்து வெளிப்படுத்தவும், தவறான/பொய்யான தகவல்களுக்கு எதிராக குரல் எழுப்பவும் வெறுப்புக்கு எதிராக ஒருங்கிணையவும்.**

